IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No.68 /2012
Deposition of witness for DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Caste | : - |
| Father's Name | : கங்காதரன் | Calling | : - |
| Village | : கொக்கேரி கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : காட்பாடி | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 26 day of September, 2019.

Cross Examination Continuation (வாதி தரப்பு)

முரளி எனது தம்பியாவார். முரளிக்கு இந்த வழக்கின் சங்கதிகள் தெரியும். அக்குவிடுதலைப்பத்திரம் எழுதும்போது எனது தந்தை உயிருடன் இல்லை. அக்குவிடுதலைப்பத்திரம் எழுதும்போது நான் சென்றிருந்தேன். அக்குவிடுதலைப்பத்திரத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன். அக்குவிடுதலைப்பத்திரத்தை முரளிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன். அக்குவிடுதலைப்பத்திரம் எழுதுவதற்கு சார்பதிவக அலுவலகத்திற்கு எவ்வளவு பணம் கட்டினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சொத்தின் மதிப்பு எனக்கு தெரியவில்லை என்றும், அதனால் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அக்குவிடுதலைப்பத்திரத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்குதெரியும் என்றும், தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அக்குவிடுதலைப்பத்திரத்தை யார் தயார் செய்தது என்றால் பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்தார்கள். பத்திரத்தை தயார் செய்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இராணிப்பேட்டையைச் சேர்ந்த நேதாஜி என்ற வழக்கறிஞரை அழைத்து வந்து பத்திரத்தை பதிவு செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னால் கண்ணாடி

இல்லாமல் படித்து பார்த்து சொல்லமுடியாது. அசல் வழக்கு எண் 605/90 எனது தந்தைக்கும் அவரது வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என்று நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ2 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 605/1990 என்ற வழக்கில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு ஆதாரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏ.ஏஸ்.51/2002 என்ற வழக்கு நடக்கும்போது என்னுடைய தந்தையார் உயிருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தையார்இறந்த விவரத்தை நான் தெரிவித்தேனா என்றால் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். 18.05.2006-ல் என்னுடைய தகப்பனார் இறந்துவிட்டார் அவர் இறந்த பின்பு 19.07.2006-ல் ஏ.எஸ்.51/2002 என்ற வழக்கில் தீர்ப்பாகியுள்ளது என்றால் வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது தந்தை இருந்தார். எந்த ஆதாரமும் இல்லாமல் அக்குவிடுதலைப்பத்திரத்தை வழக்கறிஞருடன் சேர்ந்து தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. அக்குவிடுதலைப்பத்திரத்தில் அசல் வழக்கு எண். 605/1990 மற்றும் ஏ.எஸ் 51/2002 என்ற வழக்குபற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.